# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2061/21 - 2018 මාර්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2018.03.06

*2061/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*சீஎஸ். 1/64*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
*2018, மாச்சு 06.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I

## பொது

பொருள்கோடல்.

*2. (1)* ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில், அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி:-

''சட்டத்துறைத் தலைமையதிபதி'' என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக,மன்றாடியார் தலைமையதிபதியையும், சிரேட்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியையும், மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியையும், சிரேட்ட பிரதி மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியையும் மற்றும் பிரதி மன்றாடியார் தலைமையதிபதியையும், சிரேட்ட அரச சட்டவுரைஞரையும், அரச சட்டவுரைஞரையும் அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகச் சட்டத்துறை தலைமையதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சட்டத்தரணியையும் உள்ளடக்கும்;

''தகுதிவாய்ந்த அதிகாரி'' என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவிதமாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்குப் பெயர்கொண்டு அல்லது பதவிப்பெயர் கொண்டு சனாதிபதியால் நியமிக்கப்படும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

''அவசரகால ஒழுங்குவிதி'' என்பது,இவ்வொழுங்குவிதிகளுள் எவையும் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதி எனப் பொருள்படும்;

''அத்தியாவசியச் சேவை'' என்பது, பொதுப் பயன்பாட்டுக்குரியதாகவுள்ள அல்லது தேசியப் பாதுகாப்புக்கு அல்லது பொதுமக்கள் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகவுள்ள ஏதேனும் சேவை எனப் பொருள்படுமென்பதுடன், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது அதன் கிளையெதனையும் உள்ளடக்கும்;

''பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி'' என்பது, எவரேனும் சிரேட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்;

''காணி'' என்பது, நீர் செறிந்துள்ள நிலத்தையும் மற்றும் வீடுகளின் அல்லது கட்டடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும்;

''பொலிசு அலுவலர்'' என்பது, பொலிசுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பொலிசுப் படையிலுள்ள உறுப்பினர் ஒருவர் எனப் பொருள்படும்;

''பகிரங்க அலுவலர்'' என்பது, அரசியலமைப்பிலுள்ள அதே பொருளையே உடையதாக இருத்தல் வேண்டும்;

''இலங்கை'' என்பது, அதன் ஆள்புல நீர்ப்பரப்புகளையும் அதன் ஆள்புல வான்வெளியையும் உள்ளடக்கும்.

*(2)* பொருள்கோடற் கட்டளைச்சட்டம், ஒரு பாராளுமன்றச் சட்டத்தினை அல்லது கட்டளைச்சட்டத்தினை அல்லது சட்டத்தினைப் பொருள்கோடுவதற்கு அது ஏற்புடையதாகின்றவாறு,அவசரகால ஒழுங்குவிதியொன்றையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளையும் அல்லது விதிகளையும் பொருள்கோடுவதற்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

*(3)* ஏதேனும் ஆவணத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி பற்றிய எந்தவொரு குறிப்பீடும்,முரணான உட்கருத்து தோன்றினாலொழிய, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் பின்னைய ஏதேனும் ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறாக அவ்வொழுங்குவிதிக்கான குறிப்பீடாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியானது, அத்தகைய ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பணிப்பில் அல்லது கட்டளையில் காலப்பகுதியொன்றைக் குறித்துரைக்கும்படி தேவைப்படுத்தியிருக்குமிடத்து அல்லது இயல்வதாக்கியிருக்குமிடத்து மற்றும் அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை அத்தகைய ஏதேனும் காலப்பகுதியைக் குறித்துரைக்காதவிடத்து அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை எவ்வொழுங்குவிதியின்கீழ் தரப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அவ்வொழுங்குவிதி வலுவுடையதாயிருக்கும் காலப்பகுதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

*அவசரகாலத் தத்துவங்கள் வேறு தத்துவங்களுக்கு மேலதிகமாக விருத்தல்.*

3. வேறுவிதத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலல்லாது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், சனாதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்குச் சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட வேறு எவையேனும் உரிமைகளுக்கு அல்லது தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருக்கவேண்டுமேயன்றி அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகாது.

*சனாதிபதியின் தத்துவங்களை எவரேனும் அமைச்சருக்குக் கையளித்தல்.*

4. ஏதேனும் ஓர் அவசரகால ஒழுங்குவிதியால் சனாதிபதிக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, சனாதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அமைச்சரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

*தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனம்.*

5. (1) இலங்கை முழுவதற்கும் அல்லது எவரேனுமாள் எந்த எழுத்தின்மூலம் நியமிக்கப்படுகின்றாரோ அந்த எழுத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிரதேசத்துக்காக அல்லது இடத்துக்காகப் பொதுவாக அல்லது விசேடமாக ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படக்கூடிய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காகச் சனாதிபதி, பெயரினால் அல்லது பதவியினால் எவரேனுமாளைத் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கலாம் என்பதுடன், அந்த எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அந்நோக்கங்களுள் அத்தகையவற்றுக்கு அது வரையறுக்கவும்படலாம்:

ஆயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும்,ஏதேனும் ஒழுங்குவிதியின் எவையேனும் நோக்கங்களுக்கென அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிரதேசத்திற்கென அல்லது இடத்திற்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதை விலக்குவதாகக் கருதப்படுதலாகாது.

(2) பெயர்குறிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒருவர் தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்கு நியமிக்கப்படுமிடத்து, அதற்கு முரண்படும் வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அத்தகைய நியமனம் அப்பெயர்குறிக்கப்பட்ட பதவியின் கடமைகளை அப்போதைக்குப்புரிகின்ற ஆளுக்கு நீடிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அறிவித்தலைச் சேர்ப்பித்தல்.*

6. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எவையேனும் சிறப்பேற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக எவரேனும் ஆள்மீது சேர்ப்பிக்கப்படவிருக்கும் ஓர் அறிவித்தலைக் கையளித்தல்மூலம் அல்லது அந்த ஆளுக்கு அவர் கடைசியாக வசித்த இடத்திற்கு அல்லது வழக்கமான வாழிடத்திற்கு அல்லது அவர் வேலை செய்யுமிடத்துக்கு முகவரியிடப்பட்ட அஞ்சலில் அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கலாம்.

*கட்டளையை இல்லாதொழித் தலும் வேறுபடுத்தலும்.*

7. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குவதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதினால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அக்கட்டளையை அல்லது விதியை இல்லாதொழிப்பதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு அதேமுறையிலும் நிபந்தனைகளெதுவுமுளவாயின், அந்த நிபந்தனைகளுக்கமைவாகவும் பிரயோகிக்கப்படக்கூடிய தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### அத்தியாவசிய சேவைகள்

*அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி யின் நியமனம்.*

8. (1) சனாதிபதி, கட்டளைமூலம், இலங்கை முழுவதற்குமான அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கென எவரேனும் ஆளை பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம். அத்தியாவசிய சேவைகளை வழங்குதலும் பேணுதலும் தொடர்பிலான எல்லாச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதலும் ஒன்றிணைத்தலும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி,இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தமது கடமைகளைப் புரிதலுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது பிரதி ஆணையாளர்களையும் அல்லது உதவி ஆணையாளர்களையும் பெயர்குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(3) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி (2)ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் மேலதிக ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளருக்கு இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் கடமைகளைப் புரியும் நோக்கத்திற்காக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியின்கீழ் எவ் அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வதிகாரி அல்லது அலுவலர்மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.(5) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) எந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு இவ் ஒழுங்குவிதிகளின்கீழ் ஏதேனும் தத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலர் அத்தியாவசிய சேவைகளின் பராமரிப்பை உறுதிப்படுத்த அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம், அத்துடன் ஒவ்வொரு அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுதல் விடயத்திற்கேற்றவாறாக அத்தகைய அதிகாரி, அலுவலர் அல்லது ஒருங்கிணைப்பு அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

அத்தியாவசிய சேவைகள்.

9. (1) ஏதேனும் சேவை, பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காப்பதற்கும் சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கும் அவசியமாவதெனத் தோன்றினால் சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அதனை அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் பந்தியின் நியதிகளின்படி சனாதிபதியால் அத்தியாவசிய சேவையாக வெளிப்படுத்தப்பட்ட சேவையொன்று தொடர்பிலான ஏதேனும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த் தப்பட்டுள்ளவரும்-

(அ) அத்தகைய கட்டளையின் திகதியிலிருந்து ஒரு நாள் கழிந்தபின்னர் சட்டபூர்வமான காரணமின்றி அவரது வேலைத்தலத்திற்கு அல்லது தொழிலிடத்திற்கு அல்லது அவரது தொழில்தருநரால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் காலத்துக்குக்காலம் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்திற்கு வருகைதர தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும் அல்லது சட்டபூர்வமான காரணமின்றி வேலை செய்ய தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது வேலைக்கு வராதிருக்கின்றவரும் அத்தகைய சேவையில் அவரது தொழில்தருநரின் நியதிநிபந்தனைகளுக்கிணங்க வழமையான வேலைநாளில் முழுக்காலப்பகுதியும் அல்லது ஏதேனும் பாகத்தில் வேலை செய்யாது ஒதுங்கியிருக்கின்றவரும்; அல்லது

(ஆ) அத்தகைய கட்டளையின் திகதியிலிருந்து ஒருநாள் கழிந்தபின்னர் அவரது தொழில்தருநரால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் அவர் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையை சட்டபூர்வமான காரணமின்றி புரியத்தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும்; அல்லது

(இ) குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவராக இருந்துகொண்டு அவரது தொழில்தருநரால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் அவர் காலத்துக்குக்காலம் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது இடத்தில் அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் (அத்தகைய நேரம் அல்லது இடம் அல்லது காலப்பகுதி வழமையான வேலை நேரங்களுக்குள் இருப்பினுஞ்சரி வெளியேயிருப்பினுஞ்சரி, விடுமுறை நாட்களிலிருப்பினுஞ்சரி) செய்யத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவருமான ஆளெவரும், அவர் வேலை நிறுத்தமொன்றை

அல்லது ஒழுங்குசெய்யப்பட்ட வேறு நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்கையில் அவ்வாறு வேலைக்குச் செல்ல அல்லது வேலை செய்யத் தவறியுள்ளார் அல்லது மறுத்துள்ளார் என்பது எவ்வாறிருப்பினும்-

(i) எல்லா நோக்கங்களுக்காகவும் வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது அவரது தொழிலை ஆளுகின்ற ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதிநிபந்தனைகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் அவரது தொழிலை உடனடியாக முடிவுறுத்தியுள்ளதாக அல்லது வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) மேலதிகமாக தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

இப்பந்தியில் 'குறித்துரைக்கப்பட்ட சேவை' என்பது, அத்தியாவசிய சேவையொன்றாக (1) ஆம் பந்தியின்கீழ் சனாதிபதியால் குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றென வெளிப்படுத்தப்பட்ட எந்த அத்தியாவசிய சேவையில் அத்தகைய சேவை தொடர்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் வழமையான வேலை நேரங்களுக்கு வெளியே அல்லது விடுமுறை நாட்களில் வேலை செய்யுமாறு தேவைப்படுத்தப்படக்கூடுமோ அந்த ஏதேனும் அத்தியாவசிய சேவை என்று பொருள்படும்.

(3) ஏதேனும் சேவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் சனாதிபதியால் அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தப்படுமிடத்து-

(அ) எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் எவரேனும் ஆள்-

(i) அச்சேவை மேற்கொள்ளப்படுவதற்கு முட்டுக்கட்டையிடுதல்,அதனைத் தடைசெய்தல், தாமதப்படுத்தல் அல்லது மட்டுப்படுத்தல்;

(ii) அச்சேவையில் அல்லது அதனைக் கொண்டுநடாத்துவது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆட்கள் அவர்களது வேலைத்தலத்திற்கு வருகைதருவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்குத் தடைசெய்தல், முட்டுக்கட்டையிடுதல் அல்லது தடுத்தல்;

(iii) அச்சேவையில் அல்லது அதனைக் கொண்டுநடாத்துவது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆளை அவரது வேலைத்தலத்திற்கு வருகைதருவதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு செயலாற்றுவித்தல், தூண்டுதல் அல்லது ஊக்கப்படுத்துதல்;

(iv) ஓர் அரசாங்கத் திணைக்களமாக அல்லது அதன் கிளையாக இருந்து கொண்டு, அச்சேவைக்குப் பதிலாக அல்லது அதற்குச் சமாந்தரமான வேறு ஏதேனும் சேவையைத் தாபித்தலை அல்லது பேணுதலை நிர்ப்பந்தித்தல், செயலாற்றுவித்தல், தூண்டுதல் அல்லது ஊக்கப்படுத்துதல்;

(v) அச்சேவையில் அல்லது அதனைக் கொண்டுநடாத்துவது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆளை சரணடையுமாறு அல்லது அவரது தொழிலை விட்டுச்செல்லுமாறு நிர்ப்பந்தித்தல், செயலாற்றுவித்தல், தூண்டுதல் அல்லது ஊக்கப்படுத்துதல் (அத்தகைய வேறு ஆள் அதன் விளைவாக அவ்வாறு சரணடைந்தாலுஞ்சரி சரணடையாவிட்டாலுஞ்சரி அல்லது விட்டுச்சென்றாலுஞ்சரி விட்டுச்செல்லாவிட்டாலுஞ்சரி); அல்லது

(vi) வேறு எவரேனும் ஆள் அச்சேவையில் அல்லது அதனைக் கொண்டுநடாத்துவது தொடர்பில் தொழில் வழங்குவதனை அல்லது ஏற்றுக்கொள்வதனைத் தடுத்தல்;

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயலொன்றைப் புரியுமாறு வேறு எவரேனும் ஆளை ஏதேனும் செயலினால் அல்லது ஏதேனும் உரையினால் அல்லது எழுத்தினால்

செயலாற்றுவிக்கின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற ஆளெவரும் (அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலின் விளைவாக அத்தகைய வேறு ஆள் அதனைப்புரிந்தாலுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்றாண்டுகளை விட விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையில் ஒருவகையிலான மறியற்றண்டணைக்கு ஆளாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நடைமுறை காரணமாகத் தமது தொழிலை முடிவுறுத்தியவராக அல்லது வறிதாக்கியவராகக் கருதப்படும் ஒவ்வோராளும், அத்தகைய முடிவுறுத்துகையிலிருந்து அல்லது வறிதாக்குவதிலிருந்து மூன்று நாட்களினுள், அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் சார்பில் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் குடிமனையை வறிதாக்குதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய குடிமனையை வறிதாக்கத் தவறுகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

இப்பந்தியில் ‘குடிமனை’ என்பது, வதிவு நோக்கத்துக்காக இருப்பாட்சி கொள்ளப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடம் அல்லது அறை அல்லது வேறு இடவசதி எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய கட்டிடம், அறை அல்லது வேறு இடவசதி எக்காணியில் அல்லது வளவுகளில் அமைந்துள்ளதோ அக்காணியையும் அல்லது வளவுகளையும் உள்ளடக்கும்.

(5) இவ்வொழுங்குவிதியின்கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனுமாள் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அப்போது, அத்தகைய தவறுக்காக நீதிமன்றம் விதிக்க வேண்டிய வேறேதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக –

(அ) அவ்வாளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும், அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு, குடியரசுக்கு இழப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதியின் வலுவுக்கு வருகின்ற திகதிக்குப்பின்னர் அத்தகைய ஆளினாற் செய்யப்பட்ட அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் பராதீனம் அல்லது வேறு கையாளுகை, வெற்றானதாகவும், வறிதானதாகவும் இருந்துள்ளதாகவும் இருக்கின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் சேவை, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தியாவசியமான சேவையெனச் சனாதிபதியினால் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தியாவசியமானதென வெளிப்படுத்தப்படும் அத்தகைய ஏதேனும் சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது அச்சேவையைச் சேர்ந்துள்ள எவரேனும் அலுவலர்,சேவையாளர், ஊழியர் அல்லது முகவர் என்போரின் சேவைகள், அவசியமானதெனக் கருதப்படும் இடங்களிலெல்லாம், இயைபான விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கலந்தாலோசனையுடன், பாதுகாப்பு என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அல்லது அது சார்பில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தேவைக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

## **பாகம்** III

### **நுழைவதற்கான உரிமை முதலியன**

*அதிகாரமளிக்கப் படாத நுழைவுத் தடுப்பு.*

10. (1) தகுதிவாய்ந்த அதிகாரியொருவர், அத்தியாவசிய சேவைகளின் பேணுகைக்காக முழுமையாக அல்லது பிரதானமாக இருப்பாட்சி கொள்ளப்படும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் அதிகாரமளிக்கப்படாத ஆட்களின் நுழைவைத் தடுப்பதற்கான விசேட முற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமென அபிப்பிராயப்படின், அத்தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையொன்றின் மூலம், அக்கட்டளையில் குறிப்பிடப்படும் அத்தகைய விலக்குகளுக்கமைய, ஆளெவரும் அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரி அல்லது ஆளின் அனுமதியின்றி அப்பிரதேசத்தினுள், இடத்தினுள் அல்லது அவ்வளவுகளுக்குள் நுழையக்கூடாதென அல்லது இருக்கக்கூடாதென ஏற்பாடுசெய்கின்றதான கட்டளையை இடலாம்.

(2) எவரேனும் ஆள், இவ்வவொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை மீறி ஏதேனும் பிரதேசத்தினுள், இடத்தினுள் அல்லது வளவினுள் இருப்பின் அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் நடவடிக்கைக்குப் பங்கமின்றி, அவர் அந்த இடத்திலிருந்து எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் அல்லது இலங்கை

தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் எவரேனும் உறுப்பினரொருவரால் அல்லது அதுசார்பில் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு ஆளினால் அகற்றப்படலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில், ஏதேனும் அத்தியாவசிய சேவை தொடர்பில் 'தகுதிவாய்ந்த அதிகாரி' என்னும் சொற்றொடர், அச்சேவையின் நோக்கத்திற்காகச் சனாதிபதியினால் பெயர்குறித்து அல்லது பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்படும் எவரேனும் ஆள் எனப்பொருள்படும்.

## பகுதி IV

### தேடுதல் மற்றும் கைது

தவறுகளுக்காக தேடுதல் மற்றும் கைதுசெய்தல்.

11. (1) இவ்வொழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறொன்றை அல்லது (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 354, 355, 356, 357, 358, 359, 360, 360அ, 360ஆ, 360இ என்னும் பிரிவுகள் மற்றும் 364, 365, 365அ மற்றும் 365ஆ அத்துடன் 427 தொடக்கம் 446 வரையிலான பிரிவுகளின்கீழான தவறொன்றைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிவதாக அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள எவரேனும் ஆளை,எவரேனும் பொலிசு உத்தியோகத்தர் அல்லது இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படையின் எவரேனும் உறுப்பினரொருவர் தேடுகை செய்யலாம், அத்தகைய தேடுகை செய்வதற்காகத் தடுத்து வைக்கலாம் அல்லது பிடியாணையில்லாமலே கைது செய்யலாம். மேலும் அக்குற்றம் புரிவதில் அல்லது அது தொடர்பாக உபயோகிக்கப்பட்ட ஏதேனும் வாகனம், கலம், பொருள் அல்லது பதார்த்தம் அல்லது எவ்விதமானதுமான பொருளை தேடுகை செய்யலாம், கைப்பற்றலாம், அகற்றலாம் அல்லது தடுத்துவைக்கலாம்.

(2) உட்பந்தி (1) இன் கீழ் ஆயுதம் தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரால் கைதுசெய்யப்பட்ட எவரேனும் ஆள், இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) பொலிசு அலுவலரொருவரால் கைதுசெய்யப்பட்ட எவரேனும் ஆள், மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் தேடுதலை நடாத்துகின்ற எவரேனும் ஆள், அத்தேடுதல் நோக்கத்துடன் சம்பந்தப்படுகின்ற அல்லது தொடர்புடைய ஏதேனும் கருமம் தொடர்பில் தேடுகையிடப்படும் வளவுகளில், இடத்தில், வாகனத்தில் அல்லது கலத்தில் உள்ள வேறு எவரேனும் ஆளை அல்லது தேடுகையிடப்படும் ஆளை விசாரிக்கலாம்.

(5) இவ்வொழுங்குவிதியின் (4) ஆம் பந்தியின்கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வோராளும், அவர் விசாரிக்கப்படும் அக்கருமம் தொடர்பில் அவர் அறிந்துள்ளவாறான அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியின்கீழ் தேடுகையிடப்படவேண்டிய வளவுகளில், இடத்தில், வாகனத்தில் அல்லது கலத்தில் வசிக்கும் ஆள் அல்லது அவற்றுக்குப் பொறுப்பாகவிருக்கும் ஆள், தேடுகையிடுதலை நடாத்தும் ஆளின் கோரிக்கையின்மேல் அவரை அதற்குள் கட்டற்ற உட்செல்கைக்கு அனுமதித்தல் வேண்டும் என்பதுடன் அவர் அதில் தேடுகையிடுவதற்கு வேண்டிய எல்லா நியாயமான வசதிகளையும் அளித்தலும் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின்கீழ் தேடுகையிடுதல் ஒன்றை நடாத்தும் ஆளொருவர், தேடுகையிடப்படவேண்டிய வளவுகள், இடம், வாகனம் அல்லது கலத்தினுள் பிரவேசிப்பதற்கென ஏதேனும் உட்கதவை அல்லது வெளிக்கதவை அல்லது உள் யன்னலை அல்லது வெளி யன்னலை திறக்கலாம் அல்லது உடைக்கலாம்.

(8) பெண்ணொருத்தியை தேடுகையிடுதல் அவசியமாகின்ற போதெல்லாம், தேடுகையிடுதலானது வேறொரு பெண்ணினால் செய்யப்படுதல் வேண்டும்.

(9) கைதுசெய்யும் அலுவலர் பொலிஸ் அலுவலர் ஒருவராகவிருக்கின்றவிடத்து கைது இடம்பெற்ற இடப்பரப்பின் பொலிஸ் நிலையமொன்றிற்கு பொறுப்பாகவுள்ள அலுவலருக்கும், கைதுசெய்யும் அலுவலர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவராகவிருக்கின்றவிடத்து கைது இடம்பெற்ற இடப்பரப்பின் ஏவும் அலுவலருக்கும், (1)ஆம் பந்தியின்கீழ் இடம்பெற்ற கைதை, கைது செய்யப்பட்டு இருபத்திநான்கு

மணித்தியாலயங்களினுள் அறிக்கையிடுவது எவரேனும் ஆளை கைதுசெய்தலை ஏற்படுத்திய கைதுசெய்யும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(10) ஏதேனும் ஆதனம் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் கைப்பற்றப்படும் அல்லது தடுத்து வைக்கப்படுமிடத்து, கைப்பற்றல் அல்லது தடுத்து வைப்பினை விளைவு கொடுக்கும் ஆள் ஒருவர், எவ்வாளின் கட்டுக்காப்பிலிருந்து அத்தகைய ஆதனம் கைப்பற்றப்பட்டதோ அல்லது தடுத்துவைக்கப்பட்டதோ அவ்வாளுக்கு அத்தகைய ஆதனம் தொடர்பில் பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

(11) சனாதிபதி, கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்கும் அத்தகைய விலக்களிப்புக்களுக்கு அமையவும் இலங்கையில் ஏதேனும் இடப்பரப்பில் அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறாக பொது ஊர்வலங்களை அல்லது பொதுக்கூட்டங்களை காலத்துக்குக்காலம் அக்கட்டளைமூலம் தடைசெய்யலாம்.

(12) பொலிஸ் பாரிசோதகர் தலைமையதிபதி, பொலிஸ் நிலையமொன்றிற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரினால் வழங்கப்பட்ட எழுத்திலான அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, ஆள் எவரும் அவ்விடப்பரப்பில் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவறாக அத்தகைய மணித்தியாலங்களுக்கிடையில் அல்லது அத்தகைய காலப்பகுதியின்போது ஏதேனும் பொதுவீதியில், புகையிரதப்பாதையில், பூங்காவில், பொழுதுபோக்கு இடத்தில் அல்லது வேறு ஏதேனும் பொது இடத்தில் இருத்தலாகாது என அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விலக்களிப்புகளுக்கு அமைய இலங்கையில் உள்ள ஏதேனும் இடப்பரப்பு தொடர்பில் கட்டளை மூலம் பணிக்கலாம்.

## பாகம் V

### தவறுகள் மற்றும் தண்டனைகள்

தவறுகள்.

12. (1) (அ)அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்திற்கு அழிவை அல்லது சேதத்தை விளைவிக்கும் ஏதேனும் செயலை அல்லது அத்தகைய ஆதனத்தின் பெறுமானத்தை அல்லது பயன்பாட்டை அழிக்கக்கூடிய அல்லது குறைக்கக்கூடியவாறு அத்தகைய ஏதேனும் ஆதனத்தில் அத்தகைய ஏதேனும் மாற்றத்தைச் செய்கின்ற; அல்லது

(ஆ) எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது ஊறுபாட்டை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்க முயற்சிக்கின்ற; அல்லது

(இ) வேறு எவரேனும் ஆளின்மீது குற்றவியல் அச்சுறுத்தலைப் புரிகின்ற அல்லது தாக்குகின்ற; அல்லது

(ஈ) (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 345, 354, 355, 356, 357, 358, 359, 360, 360அ, 360ஆ, 360இ, 364, 365ஆம் பிரிவுகளின்கீழ் ஏதேனும் தவறைப் புரிகின்ற; அல்லது

(உ) ஏதேனும் ஆதனத்தின் திருட்டு, வலிந்து பறித்தல் அல்லது கொள்ளையைப் புரிகின்ற; அல்லது

(ஊ) (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 427 முதல் 446 வரையான ஏதேனும் பிரிவுகளின்கீழ் ஏதேனும் தவறைப் புரிகின்ற அல்லது ஏதேனும் அத்தகைய வளவுகளிலிருந்து எவையேனும் பண்டங்களை அல்லது பொருட்களை சட்டமுறையற்று அகற்றுகின்ற அல்லது அகற்ற முயற்சிக்கின்ற; அல்லது

(எ) (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 427 முதல் 446 வரையான ஏதேனும் பிரிவுகளின்கீழ் ஏதேனும் தவறைப் புரிகின்ற அல்லது ஏதேனும் அத்தகைய வளவுகளிலிருந்து எவையேனும் பண்டங்களை அல்லது பொருட்களை சட்டமுறையற்று அகற்றுகின்ற அல்லது அகற்ற முயற்சிக்கின்ற,எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது இவ்வொழுங்குவிதிகளில் எது எவ்வாறிருப்பினும் மேல் நீதிமன்றத்தின் முன்னர் அதற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயுட்கால மறியற்றண்டனை அல்லது இருபது ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையை அனுபவிப்பதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஆதனத்தைப் பாதுகாப்பதற்கு தனியாளுக்கிருக்கும் உரிமையுடன் தொடர்புபடும் மற்றும் அத்தகைய உரிமையைப் பிரயோகிப்பதில் தீங்கிழைக்கும் ஒருவருக்கு மரணத்தை அல்லது வேறு தீங்கை எந்தச் சூழ்நிலைகளில் ஏற்படுத்தலாம் என்பதை விதந்துரைப்பதுமான (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 96ஆம் பிரிவு, பின்வருவன அப்பிரிவின் இறுதியில் சேர்க்கப்பட்டிருந்தால் போன்று பயனுடையதாதல் வேண்டும்:-

"ஐந்தாவதாக அவசரகால (நானாவித ஏற்பாடுகள், தத்துவங்கள்) ஒழுங்குவிதிகளின் 10ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு."

(3) (அ) இவ்அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஏதேனும் தவறு தொடர்பிலான குற்றப்பத்திரமொன்று குற்றம் புரியப்படும் நேரத்தில் அல்லது அந்நேரமளவில் நிலவும் பொதுமக்கள் குழப்பம் அல்லது இனரீதியாக உந்தப்பட்ட கலகங்களை மிகைப்படுத்துவதில் அல்லது அவற்றுடன் தொடர்பாக அல்லது அவற்றின்போது தவறு புரியப்பட்டதென சட்டத்துறை தலைமையதிபதி திருப்திப்படுவாராயின் அவரால் அனுப்பிவைக்கப்படலாம்.

ஆயினும், ஏதேனும் தவறு புரியப்படுதல் தொடர்பான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, சட்டத்துறைத் தலைமையதிபதி அவர் குறித்துரைக்கின்றவாறான அத்தகைய விடயங்கள் தொடர்பில் அல்லது அத்தகைய வகுதியினவான விடயங்கள் தொடர்பில் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அதன்மீது அத்தகைய வழக்கு நடவடிக்கைகள், பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியின் எழுத்திலான அதிகாரத்துடன் தொடுக்கவும்படலாம். அத்துடன் அத்தகைய தவறுகள் தொடர்பான விளக்கம் தொடர்பில் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச்சட்டக் கோவைச் சட்டத்தின் XVII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஆ) நீதிவான் நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுகின்றவிடத்து, தவறானது அவ்வொழுங்குவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தண்டனையால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

13. ஆளெவரும் - விசுவாசக் குறைப்பைத் தடுத்தல்.

(அ) (i) பகிரங்க அலுவலர்கள்; அல்லது
(ii) குடியரசின் சேவையில் ஈடுபட்டுள்ளவர்; அல்லது
(iii) அத்தியாவசியச் சேவைகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளவர்;

போன்றவர்களாகவிருக்கின்ற ஆட்களுக்கிடையில் விசுவாசக்குறைப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தல் ஆகாது

அல்லது

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளை மீறுகையொன்றாக அமைக்கின்றவாறு பகிரங்க அலுவலர் என்ற முறையில் அல்லது மேற்சொல்லப்பட்டவாறான ஆளொருவர் என்ற முறையில் தமது கடமையை மீறும் வண்ணம் எதனையும் செய்யும்படி அல்லது செய்யாதுவிடும்படி தூண்டுவதற்கு முயற்சித்தல் ஆகாது.

14. பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்கமைதிக்கு அல்லது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாகவிருக்கும் உள்ளீடுகளைக் கொண்டுள்ள எவையேனும் சுவரொட்டிகளை, கைத்துண்டுகளை அல்லது துண்டுப் பிரசுரங்களை ஆளெவரும் பொதுமக்களுக்குத் தெரியக்கூடிய ஏதேனுமிடத்தில் ஒட்டுதல், பொதுமக்களிடையே விநியோகித்தல் ஆகாது. துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றை விநியோகித்தல்.

15. ஆளெவரும், வாய்மொழிமூலம் அல்லது எத்தகையனவுமான வேறெவையேனும் வழிவகைகள்மூலம், எண்முறை அத்துடன் அல்லது சமூக ஊடகத்தினூடாகவுட்பட, பொதுமக்களிடையே பயத்தை அல்லது பொதுமக்களிடையே அமைதியின்மையை அல்லது இனவன்முறையை ஏற்படுத்தக்கூடிய அல்லது ஏதேனும் தவறு புரியப்படுவதனைச் செயலாற்றுவிக்கக்கூடிய ஏதேனும் வதந்தியை அல்லது பொய்யான கூற்றை அல்லது ஏதேனும் தகவலை அல்லது உருவப்படத்தை அல்லது செய்தியைத் தெரிவித்தல் அல்லது பரப்புதல் ஆகாது. வதந்திகளையும் பொய்யான கூற்றுக்களையும் தெரிவித்தல் அல்லது பரப்புதல்.

பொய்யான கூற்றுக்கள்.

16. எவரேனும் ஆள் –

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை பின்பற்றி விடுக்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுக்கு விடையளிக்கும்போது முக்கியமான ஒரு விபரத்தில் பிழையானதென்று அவரறிந்த ஏதேனும் தகவலைத் தெரிவித்தால்; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் அளிக்கும்படி அவர் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுத்துகை, மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறு ஆவணம் என்பவற்றில் மேற்கூறப்பட்டவாறான அத்தகைய கூற்றை அளித்தால்,

தவறொன்றைப் புரிகின்றார்.

புலனாய்வு நோக்கத்துக்காகத் தடுத்துவைத்தல்.

17. (1) இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள் ஒரு பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளின்படி புலனாய்வுகளின் நோக்கத்துக்காகத் தடுத்துவைக்கப்படலாம். அத்தகைய ஆள், பதினான்கு நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய கட்டளையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்கத் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.

(2) முற்போந்த ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள், இயன்றளவு விரைவாக ஒரு பொலிசு நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அதன்கண் தடுத்துவைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி அவரது தடுத்துவைப்புக்கான கட்டளை பிரதிப் பொலிசுப் பரிசோதகரொருவரினால் ஆக்கப்பட்டிருந்தாலொழிய, நீதிவானொருவர்முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டும்.

மிரட்டல் முதலியவற்றை தடுத்தல்.

18. (1) ஏதேனும் பிரதேசத்தில் எந்தவோராலும், வேறு எவரேனும் ஓர் ஆள் உறையும் அல்லது வேலை செய்யும் அல்லது தொழில் நடத்தும் அல்லது தற்செயலாகத் தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்குக்கிட்ட அல்லது இடத்திற்குக்கிட்ட, அந்த வீட்டில் அல்லது இடத்திலுள்ள எவரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அப்படியான ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டிலிருந்து வெளிக்கிளம்புவதைத் தடை செய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்து நிற்கக்கூடாது.

(2) இவ்வொழுங்குவிதியில் "மிரட்டல்" என்ற சொல், ஓர் ஆளினது மனதில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள எவரேனும் உறுப்பினருக்கு அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் யாரேனுமொருவருக்கு தீங்கு விளைந்திடுமோ என்ற நியாயமான ஐயவச்சத்தை ஆக்குதல் அல்லது எவரேனும் ஒருவருக்கு அல்லது ஆதனத்துக்குத் தீங்கு விளைத்துவிடுமோ என்ற நியாயமான அச்சத்தை ஆக்குதல் என்று பொருள்படும். "தீங்கு" என்ற சொல் ஆள் ஒருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வேறு வருவாய்மூலம் தொடர்பான தீங்கை உள்ளடக்குதலோடு நடவடிக்கை எடுக்கக்கூடிய ஏதேனும் பிழையையும் உள்ளடக்கும்.

அதிகாரம் பெற்ற ஆட்களை எதிர்த்தல் அல்லது தடுத்தல்.

19. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஓராளிற்கு அளிக்கப்பட்ட அல்லது ஓராளின் மேற் சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவர் பிரயோகிப்பதை அல்லது புரிவதை எந்த ஆளும் எதிர்த்தலோ தடுத்தலோ ஆகாது.

தெருக்கள், புகைவண்டிப் பாதைகள் முதலியவற்றை மறித்தலும் சேதப்படுத்தலும்.

20. எவ்வோராலும் சட்டப்படியான அதிகாரமின்றி ஏதேனும் பொதுத் தெரு, பாலம் அல்லது மதகு அல்லது புகைவண்டிப் பாதை அல்லது பொதுத் தெருப் போக்குவரத்து வாகனத்தைத் தடை செய்தலோ சேதப்படுத்தலோ ஆகாது.

தவறுகள் புரிய எத்தனித்தல்.

21. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றை–

(அ) செய்வதற்கான ஆயத்த முறையிலான ஏதேனும் செயலை புரிய எத்தனிக்கும் அல்லது செய்கின்ற; அல்லது

(ஆ) புரிவதற்கு இன்னோராளுக்கு உதவியளிக்கும் அல்லது உடந்தையாயிருக்கும்; அல்லது

(இ) புரிவதற்கு இன்னோராளுடன் சூழ்ச்சி செய்யும்

எவரேனுமாள் அத்தவறுக்குத் தானும் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் அத்தகைய தவறுக்கு விதித்துரைக்கப்பட்டவாறான அதே முறையில் விளங்கப்படுதலும் அதே தண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

தவறுக்கு உதவுதல்.

22. யாரேனுமொருவர் ஏதேனுமோர் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றிற்காகக் குற்றவாளியாகின்றாரென்பதை அறிந்திருக்கும் அல்லது நம்புவதற்கு நியாயமான காரணமுடையவராயிருக்கும் எந்தவோராளும் அந்த யாரேனுமோராளுக்கு அந்தச் சொல்லப்பட்ட தவறுக்காக அந்த ஆளைக் கைது செய்வதை, விளங்குவதனை அல்லது தண்டிப்பதைத் தடுக்கும், இடைஞ்சல் செய்யும் குழப்பும் உட்கருத்தோடு உதவியளித்தலாகாது.

ஆட்கள் குழுக்களினால் செய்யப்படும் தவறுகள்.

23. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்று ஓர் ஆட்குழுவினால் செய்யப்படுமிடத்து, அப்போது-

(அ) அந்தக் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணியாளரும், அத்துடன்

(ஆ) அந்தக் குழு ஒரு குழுமமாக இருக்குமாயின் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

தமக்குத் தெரியாமல் அத்தவறு புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு தம்மாலானவரை கவனமெடுத்தாரென்று அவர் நிரூபித்தாலன்றி அத்தவறு புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டங்கள்.

24. (1) ஏதேனுமோர் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சுமத்தப்பட்ட தேவைப்பாட்டை மீறும் அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறும் எந்தவோராளும் தவறொன்றைப் புரிந்தவராகி அத்தகைய ஒழுங்குவிதியிற் காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னரான அல்லது நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்குக் கடூழிய மறியற்றண்டனையும் ஐந்நூறு ரூபாவுக்கு குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமும் விதிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு தவறிற்கு அவ்வொழுங்குவிதியின் கீழ் தண்டனையெதுவும் விதித்துரைக்கப்படாதிருக்குமிடத்து அத்தகைய தவறைப் புரியும் ஓர் ஆள் யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னரான, அல்லது நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து ஏழாண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 மற்றும் 306 என்னும் பிரிவுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறிற்காகத் குற்றத்தீர்ப்பளிப்பட்ட எந்தவோர் ஆளுக்கும் ஏற்புடையதாதலாகாது.

## பாகம் VI

### புலனாய்வு, விளக்கம் முதலியன

தகவலை வெளி விடுவதற்கான கடமை.

25. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரிவதற்கானவோர் உட்கருத்து, எத்தனிப்பு அல்லது புரிவதற்கான ஆயத்தமுறை பற்றி அறியவரும் எவரும் அது பற்றிய தகவலை மிக அண்மையில் உள்ள கிராமஅலுவலருக்கு அல்லது மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.

(2) பந்தி (1) இல் குறிப்பிடப்பட்ட தகவலை வேண்டுமென்று கொடுக்கத்தவறும் எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) அவசரகால ஒழுங்குவிதியொன்றின்கீழான தவறொன்று தொடர்பிலான ஏதேனும் தகவலைப் பெறும் எவரேனும் பகிரங்க அலுவலர் அல்லது கிராம அலுவலரெவரும், மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அத்தகைய தகவலை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

புலனாய்வுக்கான பொலிசு அலுவலர்களின் தத்துவம்.

26. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு பற்றி புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலரெவரேனும் -

(அ) அத்தவறு பற்றிய நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அறிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாளை வாய்மொழி மூலம் விசாரணை செய்யலாம் அத்துடன் அவ்வாறு அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை எழுத்தில் வடிக்கலாம்:

ஆயின், அத்தகைய கூற்று எழுத்தில் வடிக்கப்பட்டபின்னர் அதனை அளிப்பவராலும் அதனைப் பதியும் பொலிசு அலுவலராலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்:ஆயின், மேலும், அத்தகைய கூற்று எழுத்தில் வடிக்கப்பட்டபின்னர் அதனை எவரேனுமாள் ஒப்பமிட மறுத்தால் அத்தகைய மறுப்பானது பொலிசு அலுவலரால் பதியப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆளின் மாதிரிக் கையெழுத்து, நிழற்படங்கள், விரலடையாளங்கள் மற்றும் வேறு அடையாளங் காட்டும் குறிகளைப் பெற்றுக்கொள்ளலாம்;

(இ) அத்தகைய ஆளைத் தேடுகையிடலாம் அல்லது அத்தகைய ஆள் வதியும் வீட்டினுள் அல்லது வேலைத் தலத்தினுள் அல்லது அவ்விடத்தைத் தேடலாம்;

(ஈ) ஏதேனும் அத்தகைய தவறுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்டிருக்கின்றதென அல்லது தொடர்புபட்டிருக்கின்றதென சந்தேகிக்கப்பட்ட அல்லது ஏதேனும் இடத்தில், கட்டிடத்தில், வாகனத்தில் அல்லது கலனில் நுழைந்து தேடலாம்; அத்துடன்

(உ) ஏதேனும் தந்திச் செய்தி, அஞ்சல் ஆவணம் அல்லது ஏதேனும் வங்கியிலுள்ள வேறு புத்தகம் அல்லது ஆவணம் உட்பட எவ்வகையினதான அசைவுள்ள ஆதனமெதனையும் சோதனையிட்டு உடைமையிலெடுக்கலாம்;

ஆயினும், எவ்வாறாயினும் ஏதேனும் வங்கியிலிருந்து அல்லது அஞ்சலகத்திலிருந்து ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைப் பெறுவதற்கு நாடுமுன்னர் விடயத்திற்கேற்ப அத்தகைய வங்கிக்கு அஞ்சலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள முகாமையாளருக்கு அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் அத்தகைய புலனாய்வின் நோக்கத்திற்காக தேவைப்படுகின்றதென உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத பதவியொன்றை வகிக்கும் பொலிசு அலுவலரொருவரினால் முன்னைய எழுத்திலான தகவலுடன் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

சந்தேகிக்கப்பட்ட ஆட்களின் உடமையிலுள்ள ஆவணங்கள்.

27. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றுடன் தொடர்புபட்டவரென சந்தேகப்படும் ஆளொருவரின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பத்திரம் அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் இயைபானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய புத்தகம், ஆவணம் அல்லது பத்திரத்தின் உள்ளீடுகள் அதற்கான எண்பிப்பு இன்றி அத்தகைய ஆளுக்கெதிராக சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

விசாரிப்பதற்குள்ள உரிமையும் உதவி செய்வதற்கான கடமையும்.

28. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணான எது எவ்விதமிருப்பினும் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றை புலனாய்வு செய்யும் பொலிசு அலுவலரொருவர் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர்-

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது கட்டுக்காப்பில் இருக்கும் ஆளொருவர் உட்பட எவரேனும் ஆளை விசாரணை செய்வதற்கான உரிமையையும் அத்துடன் அத்தகைய விசாரணைக் காலத்தின்போது அத்தகைய புலன் விசாரணை நோக்கமாக இடத்திற்கிடம் அத்தகைய ஆளை இட்டுச்செல்ல உரிமையும் கொண்டுள்ளார்; அத்துடன்

(ஆ) அத்தகைய புலனாய்வு நோக்கத்திற்காக அவசியமான ஆவணமொன்று உட்பட, அவ்வாறு ஏதேனும் பொருள் அல்லது வேறு பண்டத்தை எவரேனும் ஆளிடமிருந்து பொறுப்பிலெடுப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றையிட்டுப் புலனாய்வு செய்யும் பொலிசு அலுவலருக்கு அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளுக்கு எல்லா உதவியும் செய்வது ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும் என்பதுடன் இவ்வொழுங்குவிதியின் (1) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் விசாரணை செய்யப்படும் ஒவ்வோராளும் அவருக்கு விடப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையாக மறுமொழியளித்தலும் வேண்டும்; அத்துடன் வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய ஆள் எந்தத் தன்மையில் அத்தகைய தகவலைப் பெற்றார் அல்லது அத்தகைய ஆவணத்தின் உள்ளடக்கம் பற்றி அறிந்தகொண்டார் என்பதனைப் பொருட்படுத்தாமல் புலனாய்வின் விடயப் பொருளை மருவிய ஏதேனும் ஆவணத்தின் உள்ளடக்கம் உட்பட எல்லாத் தகவலையும் வெளியிடுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலருக்கு அல்லது உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு, ஒழுங்குவிதியின் (1) என்னும் பந்தியின்கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வோராளினதும் கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் உள்ள ஆவணமொன்றுட்பட, ஏதேனும் பொருளை அல்லது வேறு பண்டங்களை ஒப்படைக்கும்படி அத்தகைய பொலிசு அலுவலரினால் அல்லது உரியமுறையில் அதிகாரமளிக்கப்படும் ஆளினால் பணிக்கப்படும்போது அவ்வாறு செய்தல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளுள், எவற்றினதும் மீறுகையொன்று அல்லது அதன்கீழ் சுமத்தப்படும் ஏதெனும் கடமையை மீறுதலானது, இவ் அவசரகாலவொழுங்குவிதிகளின்கீழான தவறொன்றாதல் வேண்டும்.

**சென்று பார்ப்பதற்குப் பொலிசு அலுவலருக்குள்ள உரிமை.**

29. எவரேனும் ஆள் தடுப்புக்காவலில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் காலப்பகுதியின் போது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலரொருவர், அத்தகைய புலனாய்வு நோக்கத்திற்காக அத்தகைய எவரேனுமாளை நியாயமான மணித்தியாலங்களின்போது பார்ப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பொலிசு அலுவலரின் தத்தவங்களின் வேறு தத்துவங்களுக்கு மேலதிகமான வையாக இருத்தல்.**

30. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்குள்ள தத்துவங்களுக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டும்; அவற்றைக் குறைப்பனவாகவல்ல.

**நீதிமன்ற வழக்கு நடவடிக்கை களுக்கான முன்னுரிமை.**

31. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்படும் தவறொன்று தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகள், நீதிமன்றத்தின் வேறேதேனும் அலுவலுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்.

**விசாரணைகளும் விளக்கங்களும்.**

32. (1) இதன்கண் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிரவும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்படும் தவறொன்று தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகள், அவ்வாள் அப்போதைக்கு எந்த இடத்தில் உள்ளாரோ இடத்தின்மீது நியாயாதிக்கங்கள் கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள தோதான நீதிமன்றத்தின் முன்னர் எடுக்கப்படலாம்;

(2) (அ) அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டனவெனச் சார்த்தப்படும் தவறுகள்; அல்லது

(ஆ) அத்தகைய தவறுகளாகவமைகின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள், அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிக்கையில் அல்லது புரிகையில் அல்லது பிரயோகிப்பதாக அல்லது புரிவதாகக் கருதி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைந்தவிடத்து, அல்லது அதிலிருந்து எழுந்தவிடத்து அல்லது அதில் செய்யப்பட்டவிடத்து அல்லது செய்யாது விடப்பட்டவிடத்து, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஆட்களினாற் புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட தவறுகள்.

எந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவேண்டுமென அல்லது விளங்கப்படவேண்டுமெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி முடிபு செய்யலாம். அத்தகைய நீதிமன்றம், அத்தகைய தவறுகள் அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினது இடப்பிரதேச எல்லைகளினுள் புரியப்பட்டிருப்பின், அத்தகைய தவறுகளை விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருந்ததான ஒரு நீதிமன்றமாகவிருத்தல் வேண்டும்.

(3) குற்றச்சாட்டுகளுள் ஆகக்குறைந்தது ஒன்றாவது (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றுக்கானதாகவிருக்குமிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குற்றப்பத்திரமொன்றை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பலாமென்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர், அவ்வாறு முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரத்தின் மீது யூரர் சபையொன்றின்றி விளங்கப்படுதலும் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2)ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி, எந்த நீதிமன்றத்தினால் ஏதேனும் தவறு விசாரணை செய்யப்படவேண்டுமோ அல்லது விளங்கப்படவேண்டுமோ அந்த நீதிமன்றம் பற்றி முடிபு செய்யுமிடத்து, அவர் தமது எழுத்திலான ஆணைமூலம், அத்தகைய தவறு எந்த நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படவேண்டுமோ அல்லது விளங்கப்படவேண்டுமோ அந்த நீதிமன்றமாக அத்தகைய நீதிமன்றத்தைப் பெயர் குறித்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய விசாரணை அல்லது விளக்கம், அத்தகைய ஆணையின் அதிகாரத்தின் மீது அத்தகைய நீதிமன்றத்தினால் நடாத்தப்படுதலும் வேண்டும்; அத்தகைய விசாரணையின் அல்லது விளக்கத்தின் வழக்கு நடவடிக்கைகளுடன் அது பதிவேட்டில் கோப்பிடப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (2)ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியின் முடிபொன்று -

(அ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது-

(ஆ) இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(இ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(ஈ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களினால் அல்லது குறிப்பிட்ட எவரேனும் ஆளினால் புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(உ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் குறிப்பிட்ட எவரேனும் ஆளினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட குறிப்பிட்ட ஏதேனும் தவறுக்கு, ஏற்புடையற்பாலதாக் கப்படலாம்.

(6) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும் போது, ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து வேறேதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது இடத்துக்கு ஏதேனும் குற்றவியல் தவறை இடமாற்றி விசாரணை செய்வதற்கு (அல்லது விளங்குவதற்கு) சட்டத்துறைத் தலைமையதிபதிக்குத் தத்துவமளிக்கின்ற 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 47ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவு வலுவில் இல்லையென்றாற்போன்று பயனுடையதாதல் வேண்டும்.

சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதி.

33. (1) பதினாறாம் ஒழுங்குவிதியின் (3)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய -

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கெதிரான தவறொன்றுக்காக; அல்லது

(ஆ) அத்தகைய தவறாக அமைகின்ற செயல் அல்லது செய்யாமை, அத்தகைய ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிக்கையில் அல்லது புரிகையில், நேரடியாகவோ மறைமுகமாகவோ, விளைந்திருக்குமிடத்து அல்லது எழுந்திருக்குமிடத்து, அல்லது செய்யப்பட்டதாகவிருக்குமிடத்து அல்லது செய்யாததாகவிருக்குமிடத்து அல்லது செய்யாப்படாததாக விருக்குமிடத்து, வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கெதிரான தவறொன்றுக்காக,

சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியினால் அல்லது அனுமதியுடன் தவிர, நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகள், கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கெதிரான ஏதேனும் தவறு தொடர்பில் ஏற்புடையதாதலாகாதெனச் சனாதிபதி கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய கட்டளை வலுவில் தொடர்ந்திருக்கும் காலம்வரை அப்பந்தியானது அத்தகைய ஏதேனும் தவறுக்கு ஏற்புடையதாதலுமாகாது.

34. (1) வேறேதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது வேறு எழுத்திலான சட்டத்தைப் பொருட்படுத்தாது, அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறுக்கான நீதாய விளக்கம் உட்பட்ட விளக்கமானது, சட்டத்துறைத் தலைமையதிபதியினாலான குற்றப்பத்திரத்தின்மேல் நடாத்தப்படலாம் என்பதுடன், அதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள், யூரர் சபையில்லாமல், விடயத்துக்கேற்ப, நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னர் பூர்வாங்க விசாரணையொன்றின்றி விளங்கப்படுதலும் வேண்டும்: *மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்கள்.*

ஆயினும், பூர்வாங்க விசாரணையொன்றில் பதியப்பட்ட சாட்சியம் குற்றப்பகர்வொன்றைத் தயாரிக்க அவசியப்படும் என சட்டத்துறை தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து பூர்வாங்க விசாரணையொன்றை நடத்துமாறு பணிக்கலாம். 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டகோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV என்பதன் ஏற்பாடுகள் அத்தகைய பூர்வாங்க விசாரணைக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் தவறொன்றைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளெவரும் பிணைக்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(3) நீதாய மேல் நீதிமன்றம் உட்பட, இவ்வொழுங்குவிதியின்கீழ் மேல் நீதிமன்றத்தின்முன்னரான விளக்கம் இயன்றளவு விரைவாகவும் யூரர் சபையில்லாமல் விடயத்துக்கேற்ப மேல்நீதிமன்றத்தில் அல்லது நீதாய மேல் நீதிமன்றத்தில் முன்னரான வேறு விளக்கங்களுக்காக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையிலும் நடாத்தப்படுதல் வேண்டும்.

35. 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டகோவைச் சட்டத்தின் அத்தியாயம் XI இன் ஏற்பாடுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் நடத்தப்படும் எவையேனும் புலனாய்வுகளுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது. *1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XI இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக மாட்டாது.*

**பாகம் VII**

**நானாவிதம்**

36. (1) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும் போது சார்ஜன்ட் ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள எவரேனும் பொலிசு அலுவலர், கோப்றல் ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள இலங்கைத் தரைப்படையின் எவரேனும் உறுப்பினர், தலைமைக் கடலோடி ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள இலங்கைக் கடற்படையின் எவரேனும் உறுப்பினர் அல்லது கோப்றல் ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள இலங்கை வான்படையின் எவரேனும் உறுப்பினர், ஏதேனும் பொது வீதியில், புகையிரதப் பாதையில், பொதுப் பூங்காவில், பொதுப் பொழுதுபோக்கு இடத்தில் அல்லது வேறு பொது இடத்தில், கடற்கரையில் அல்லது அதற்கு அண்மையில், அல்லது ஏதேனும் பொதுக் கட்டிடவளவில் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அதற்கு *நானாவிதத் தத்துவங்கள்.*

அண்மையில் அல்லது அதன் சுற்றாடலில் இருந்து எவரேனும் ஆளை அல்லது ஆட்களை அகன்று செல்லுமாறு கட்டளை இடலாம் என்பதுடன் விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதல் அத்தகைய ஆள் ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

(2) கட்டளையொன்றை வழங்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின்கீழ் கட்டளையொன்று வழங்கப்படுவதன் மீது ஆள் எவரும் அக்கட்டளையுடன் இணங்கியொழுகமாட்டாரென்ற தீர்மானத்தைக் காட்டுவதான அத்தகைய முறையில் நடந்துகொள்வாராயின் ஆயுதம் தாங்கிய படைகள் உள்ளடங்கலாக பலவந்தம் மூலம் அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு முற்படலாம் என்பதுடன், ஆளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கும் அல்லது கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும் அத்தகைய அலுவலர் செய்விக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும்போது 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் பிரிவு 360(1), (2) மற்றும் (4) என்பன ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளிற்கு அல்லது எவரேனும் ஆள் தொடர்பாக ஏற்புடையனவாதல் ஆகாது.

கேள்விகளுக்கு மறுமொழியளிக்கும் கடமை.

37. (1) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டு மற்றும் தடுத்து வைக்கப்பட்ட ஆள் ஒருவர் எவரேனும் பொலிசு அலுவலரால் அல்லது தரைப்படை ஏவுநரினால், கடற்படை ஏவுநரினால் அல்லது வான்படை ஏவுநரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பிற அலுவலரால் அத்தகைய கட்டுக்காப்பு மற்றும் தடுத்துவைத்தல் காலப்பகுதியின்போது கேள்விக்கு உட்படுத்தப்படலாம் என்பதுடன் அவருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட கேள்விக்கு மறுமொழியளித்தல் அவ்வாறு கேள்விக்கு உட்படுத்தப்பட்ட ஆளின் கடமையாதலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழ் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட ஆள் எவரையும் விசாரணைக்கு உட்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய விசாரணையுடன் தொடர்புபட்ட ஏதேனும் வேறு நோக்கத்திற்காக இவ்வொழுங்குவிதியின் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அலுவலர், அத்தகைய ஆளைத் தடுத்து வைத்த அல்லது கட்டுக்காத்த ஏதேனும் இடத்தில் இருந்து அகற்றலாம் என்பதுடன் அவரை ஒரு தடவையில் ஏழு நாட்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கு அத்தகைய அலுவலரின் தற்காலிகக் கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம்.

தகவலைப் பெறுவதற்கான அல்லது பொருட்களைப் பரிசோதிப்பதற்கான தத்துவம்.

38. (1) இவ்வொழுங்குவிதிகளில் அடங்கியுள்ள எவையேனும் விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கம் இன்றி, ஆள் எவரும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்குக் குறித்துரைக்கப்படுமிடத்து தேசிய பாதுகாப்பு நலன்களுக்குஅல்லது பொது ஒழுங்கமைதியைப் பேணுவதற்கு, அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்குப் பெறுவது அல்லது பரிசோதிப்பது அவசியமானதென அல்லது உசிதமானதென அதிகாரி அல்லது அவ்வேண்டுகோளை விடுத்த ஆள் அபிப்பிராயப்படுமிடத்து அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளிற்குத் தகவலை அல்லது பொருளைக் கொடுத்துதவுதல் அல்லது முன்வைத்தல் வேண்டும் என்பதுடன் ஆள் எவரும் இவ்வொழுங்குவிதியின்கீழ் அவருக்கு முறையாகச் செய்யப்பட்ட வேண்டுகோளைப் பின்பற்றி அவருடைய உடைமையில் ஏதேனும் தகவலை அல்லது பொருளைக் கொடுத்து உதவுவதற்கு அல்லது முன்வைப்பதற்குத் தவறியிருப்பின் அவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) இவ்வொழுங்குவிதியில் "பொருள்" என்பது, ஏதேனும் புத்தகம், கணக்கு அல்லது ஆவணம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மோட்டார் வாகனச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகளிலிருந்து ஆயுதம் தாங்கிய படைகளின் உறுப்பினர்களுக்கு விலக்களித்தல்.

39. பொது ஒழுங்கமைதியைப் பேணிக்காக்கும் நோக்கத்திற்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவ்வாறு செய்யுமாறு அதிகாரமளிக்கப்படும்போது இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினர் ஒருவர் ஏதேனும் மோட்டார் வாகனத்தைச் செலுத்துகையில் 1955 ஆம் ஆண்டு யூலை 08 ஆந்திகதிய 10,815 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட,1955 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (மாட்சிமை தங்கிய மகாராணியாரின் படைகளுக்கு விலக்களித்தல்) ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை (அ) வில் குறித்துரைக்கப்பட்டவாறாக மோட்டார் வாகனச்சட்டம் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அத்தகைய ஏற்பாடுகளில் இருந்து விலக்களிக்கப்படவேண்டும்.

அரசாங்க அதிபரின் தத்துவங்கள்,

40. (1) சனாதிபதியானவர் கட்டளைமூலம், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பிற்காக ஒருங்கிணைப்பு அலுவலராக இருப்பதற்கு எவரேனும் ஆளைப் பெயர்குறித்து அல்லது பதவி குறித்து

நியமிக்கலாம். (2) ஒருங்கிணைப்பு அலுவலர், இலங்கையில் ஏதேனும் இடப்பரப்பிற்காகக் கட்டளைமூலம் சனாதிபதியால் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது வேறுவகையில் அரசாங்க அதிபர் ஒருவர்மீது அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும், அல்லது பணிகளையும் அவ்விடப்பரப்பில் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்திற்காகக் குறிப்பீடு ஒவ்வொன்றும் அவ்விடப்பரப்பின் விடயத்திலான ஏற்புடைமையில் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கான குறிப்பீடு ஒன்றாக பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*கடமைகள் மற்றும் பணிகள் என்பன ஒருங்கிணைப்பு அலுவலரால் பிரயோகிக்கப்பட்டு அல்லது நிறைவேற்றப்பட்டு புரியப்படலாம்.*

(3) சனாதிபதியானவர் கட்டளைமூலம், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் இடப்பரப்பிற்காக (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மீது மேற்பார்வையை பிரயோகிப்பதற்குப் பிரதம ஒருங்கிணைப்பாளராக இருப்பதற்கு எவரேனும் ஆளைப் பெயர்குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் பிரதான ஒருங்கிணைப்பாளரின் கடமைகளைப் புரிவதற்கு அவருக்குத் துணைபுரிவதற்கென அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்களைச் சனாதிபதி பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(5) பிரதான ஒருங்கிணைப்பாளர், (4) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளருக்கு, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய பிரதான ஒருங்கிணைப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(6) மூன்றாம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் பிரதான ஒருங்கிணைப்பாளர் அல்லது (4) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படுபவரும் அத்துடன் பிரதான ஒருங்கிணைப்பாளரின் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி (5) ஆம் பந்தியின்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்டுள்ளவருமான எவரேனும் பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்–

(அ) அவர்மீது மேற்பார்வை செலுத்துகின்றவராய் இவ்வொழுங்குவிதியினால் எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்; அத்துடன்

(ஆ) அவர்மீது மேற்பார்வை செலுத்துகின்ற எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு, இவ்வொழுங்குவிதியினால் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலரினால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் பற்றி விசேடமான அல்லது பொதுவான பணிப்புக்களை விடுக்கலாம்.

*பகிரங்க அலுவலர்கள் முதலியவர்களின் கடமை.*

41. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளை நல்லெண்ணத்துடனும் பாரபட்சமின்றியும் எல்லாவற்றையடக்கியும் வலுவுக்கிடுவதும் அவர்களுக்கு இயன்றளவுவரை இதன்கண் அடங்கியுள்ள ஒழுங்குவிதிகளுள் எவற்றையும் மீறுவதைத் தடுப்பதற்கு நல்லெண்ணத்துடன் நடபடிகள் எடுப்பதும் எல்லாப் பகிரங்க சேவையாளர்களினதும், பொலிசு அலுவலர்களினதும், ஆயுதந்தாங்கிய படைகளினதும், நியதிச்சட்டமுறையான சபைகளினதும் அதிகாரசபைகளினதும் கடமையாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.